செ.வெ.எண்.40 நாள்.24.01.2018

**பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாமிற்கான மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

பல்ஸ் போலியோ சொட்டு மருந்து வழங்கும் ஒருங்கிணைப்பு கூட்டம் மாவட்ட ஊராட்சிமன்ற அலுவலகத்தில் (23.01.2018) மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது,

போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயை முற்றிலும் ஒழித்திட கடந்த 21 வருடங்களாக போலியோ சொட்டு மருந்து ஐந்து வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வருகின்ற 28.01.2018 ஞாயிற்று கிழமை அன்று பல்ஸ் போலியோ முதல் தவணை சொட்டு மருந்து வழங்கும் முகாம் சிறப்பாக நடத்தப்பட உள்ளது. இரண்டாவது தவணையாக வருகின்ற 11.03.2018 ஞாயிற்றுக்கிழமை அன்று போலியோ சொட்டு மருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1868 மையங்களில் சுமார் 3,39,730 குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து வழங்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. அரசு மருத்துவமனைகள் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள் மற்றும் அரசு பள்ளிகளில் இந்த போலியோ சொட்டு மருந்து வழங்கப்படும். இந்த முகாமில் பொது சுகாதாரத் துறை பணியாளர்கள், சத்துணவு பணியாளர்கள் மற்றும் சுய உதவிக்குழுவினர்கள் ஆக மொத்தம் 7297 பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

மேலும், பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், திருவிழா நடைபெறும் இடங்கள் மற்றும் பொழுதுபோக்கு பூங்கா ஆகிய இடங்களில் தனியாக முகாம்கள அமைக்கப்பட்டு அங்கு வரும் குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வெளிமாநிலங்களில் இருந்து கட்டுமான பணிக்காக வந்துள்ள பணியாளர்களின் குழந்தைகளின் எண்ணிக்கை தனியாக கணக்கிடப்பட்டு அவர்களுக்கும் 29 சிறப்பு நடமாடும் குழுக்கள் அமைக்கப்பட்டு போலியோ சொட்டு மருந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் தவறாமல் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி ஏற்கனவே சொட்டு மருந்து வழங்கப்பட்டிருப்பினும், இம்முறையும் ஐந்து வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் போலியோ சொட்டு மருந்து வழங்கி போலியோ என்னும் இளம்பிள்ளைவாத நோயை முற்றிலும் ஒழித்திட அனைவரும் ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் இணை இயக்குநர் நலப்பணிகள் மரு.சுந்தரராஜ், துணை இயக்குநர்கள் நலப்பணிகள் மரு.T.செந்தில்குமார், மரு.V.K.பழனி, மரு.கனிமொழி, மரு.R.L.கால பைவரசாமி, மரு.வள்ளியம்மாள், மருத்துவ அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்புத் துறை,

காஞ்சிபுரம்.